(இ—ஆ)ம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : ஈரோடு நகரில் சிவில் நீதி மன்றங்களும், கிரிமினல் நீதி மன்றங்களும் தற்போது வெவ்வேறு இடங்களில் உள்ளன. இவையனைத்தும் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் ஒரு கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டுவதற்கான இடத்தை அரசின் செலவில் பெற வேண்டியுள்ளது. இதற்கான நில ஆர்ஜித குறிப்புரை அனுப்பும்படி கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியாளர் கோரப்பட்டுள்ளார்.

முசிறியில் முன்சீப் கோர்ட்டு.

* 502 வினா.-திரு. பெ. சௌந்தர பாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

திருச்சி மாவட்டம் முசிறியில் முன்சீப் கோர்ட்டு ஒன்று துவக்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : குழுவின் அறிக்கையைப் பரிசீலித்த பிறகே ஒரு முடிவு எடுக்க முடியும்.

திரு. பு. செ. முத்துச்செல்வன் : முசிறியில் நீண்ட நெடுங்காலமாக இந்த சிவில் வழக்குகளை நடத்த மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குளித்தலை போன்ற இடத்திற்குச் சென்று தான் தொடங்க வேண்டியிருக்கிறது. எனவே ஒரு மாத காலத்திற்குள் முசிறியில் ஒரு முன்சீப் கோர்ட்டைத் தொடங்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குழு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் ஒரு சிபார்சாகச் செய்திருக்கிறது. அதைப் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

பள்ளப்பட்டிக்கு குடி நீர் வழங்கல்.

* 491 வினா.—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பள்ளப்பட்டி பேரூராட்சி மன்ற குடிநீர் திட்டம் தற்பொழுது எந்த அளவில் உள்ளது?

(இ) இத்திட்டம் பூர்த்தியடைய இன்னும் எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பள்ளப்பட்டி குடிநீர்த் திட்டத்திற்கு அரசு ஆணை 44 நாள் 6–1–71-ல் அரசு ஒப்பளிப்பு ரூ 22.75 இலட்சத்திற்கு அளிக்கப்பட்டு தலைப்பிடத்தில் சேகரிப்புக் கிணறு வேலைகள்,

மற்றும் நீர் உந்து குழாய் பதிக்கும் வேலைகளும் முடிவடைந்துள்ளன. பகிர்மான குழாய்கள் பதிக்கும் வேலையும் சிப்பந்திகள் குடியிருப்பு இல்லங்களும் முடிவடையும் தருவாயிலுள்ளன. நீர்த் தேக்கத் தொட்டி வேலை துவக்கப்பட்டுத் துரிதமாக நடந்து கொண்டு வருகின்றது.

(இ) இவ்வருட இறுதிக்குள் இத்திட்டத்தின் எல்லா வேலைகளும் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, தண்ணீர் தொட்டி வேலை நிச்சயமாக ஆரம்பிக்கப்படவில்லை. வேனிற்காலம் தொடங்குகிறது. வேனிற் காலத்தில் தான் அங்கே தண்ணீர் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கும். ஆகவே, இந்த மாதத்திற்குள்ளாகவாவது அங்கே தண்ணீர் தொட்டியைக் கட்டி முடிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எப்படியும் இந்த ஆண்டு இறுதிக்குள் இந்தத் திட்டம் முடிவு அடைவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : தமிழக அரசு செய்யும் நல்ல திட்டங்களுக்கு எல்லாம் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டி வரும் மத்திய அரசு, குடிநீர் தொட்டி கட்டும் திட்டத்திலும் ஓரவஞ்சனை காட்டுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

துப்பறியும் பணிக்கு நாய்களைப் பயன்படுத்தல்

*492 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார்களுக்குச் சொந்தமான சில நாய்களை போலீஸ் துப்பறியும் வேலைக்குப் பயன்படுத்திக்கொள்ள அவற்றிற்கு பயிற்சியளிக்க அரசு ஆலோசித்து வருகின்றதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. ஆ. பரந்தாமன் : இங்கே போலீஸ் துறையில் பயன்படுத்தப் படுகிற நாய்கள் பொதுவாக எந்த நாட்டைச் சார்ந்தவை ? அப்படிப் பயன்படுத்தப்படுகிற நாய்கள் எத்தனை உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே ஜெர்மனியில் இருந்து 6 நாய்கள் தருவிக்கப்பட்டிருந்தன. அவற்றில் இங்கே உள்ள சீதோஷ்ண நிலைக்கு ஒத்துக்கொள்ளாமல் சென்னையில் 3 நாய்களும்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS